ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




செவ்வாய் ❖ ஜூலை. 18, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 284 ❖ ரூ.10

### மது அருந்துவோரை 'குடிகாரன்' என்று சொல்வதை பொறுத்துக்கொள்ள முடியாது

# டென்ஷன்

## காலையில் கடுமையான வேலைக்குச் செல்லக்கூடியவர்கள், தவிர்க்க முடியாமல் மது அருந்துகின்றனர்: அமைச்சர் முத்துசாமி

**கோவை , ஜூலை. 18– "காலையில் மது அருந்துபவர்களை 'குடிகாரன்' என்று யாராவது சொன்னால், அதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. காலையில் கடுமையான வேலைக்குச் செல்லக்கூடியவர்கள், தவிர்க்க முடியாமல் மது அருந்துகின்றனர்" என்று தமிழக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் முத்துசாமி கூறியுள்ளார்.**



கோவையில் தமிழக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் முத்துசாமி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "டெட்ரா பாக்கெட்டுகளில் மது விற்பனை செய்யப்படுவதை பொறுத்தவரை, அரசு இன்னும் ஆய்வில்தான் வைத்திருக்கிறது. அது இன்னும் கொண்டு வரப்படவில்லை. 90 மி.லி மது விற்பனையைப் பொறுத்தவரை, எங்களிடம் கருத்தைப் பகிர்ந்துகொண்டவர்கள், காலையில் எங்களுக்கு மது அருந்த வேண்டும் என்று கூறுகிறார்கள். தயவுசெய்து நீங்கள் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். நான் யாரையும் குறை சொல்வதற்காக கூறவில்லை.

காலையில் மது அருந்துபவர்களை குடிகாரன் என்று யாராவது சொன்னால், அதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. மாலையில் அது வேற விசயம். காலையில் கடுமையான வேலைக்குச் செல்லக்கூடியவர்கள், தவிர்க்க முடியாமல் மது அருந்துகின்றனர். இதை நாம் புரிந்துகொள்ள வேண்டுமா? வேண்டாமா? அவர்கள் செய்கின்ற வேலைகள் எல்லாம் வேண்டும். வீட்டை விட்டு வெளியே வருகிறோம். சாக்கடை அடைத்திருந்தால், மூக்கைப் பிடித்துக் கொண்டு வீட்டினுள் சென்றுவிடுகிறோம். அதை சுத்தம் செய்வதற்கு யார் வருகிறார்கள்? அப்படிப்பட்டவர்களை ஏன் கேவலப்படுத்துகிறீர்கள்? எனவே, மாற்றுவழிஎன்னஎன்பதை கண்டுபிடிக்கலாம். 90 மி.லி மது விற்பனையை பொறுத்தவரை, இப்படியாக பலர் வருகின்றனர்.

இது தொடர்பாக நாங்கள் கணக்கெடுத்தோம். ஏறத்தாழ நூற்றுக்கு 40% பேர் டாஸ்மாக் கடைக்கு சராசரியாக அரை மணி நேரம் இன்னொருவருக்காக காத்திருக்கின்றனர். ஒருவர் கிடைத்தபிறகு இருவரும் வாங்கி மது அருந்துகின்றனர். அத்தகையவர்களிடம், இரவே வாங்கிச் செல்ல வேண்டியதுதானே, காலையில் அருந்துவதற்கு என்று கேட்டபோது, எங்களால் அது முடியாது. எங்களுடைய குடும்பம் அப்படி.

பணக்காரர்கள் மது வாங்கிச் சென்றால், வீட்டில் தனி அறை இருக்கும், அலமாரி இருக்கும். ஆனால், இவர்களைப் போன்றவர்களுக்கு அந்த வசதி கிடையாது. பத்துக்கு பத்து அறைக்குள்தான் அத்தனை குடும்பமும் இருக்கிறது. அவர்கள் கூறுவதில் நியாயம் இருக்கிறதா? இல்லையா? . எனவே, விளையாட்டாக அல்லது ஒரு ஜாலிக்காக மது அருந்துபவர்களாக இருந்தால் என்ன வேண்டுமானாலும் நாம் பேசலாம்.

அதேபோல், 7மணிக்கே கடையைத் திறக்கப் போகிறார்கள் என்று சொல்கின்றனர். அரசுக்கு அந்த யோசனையே இல்லை. திரும்பத் திரும்ப நாங்கள் கூறுகிறோம். டாஸ்மாக் மூலமாக பெரிய வருமானத்தை ஈட்ட வேண்டும். அதை உயர்த்த வேண்டும் என்ற எண்ணமெல்லாம் இல்லை" என்று அவர் கூறினார்.

## "எதிர்க்கட்சிகள் கூட்டத்தின் நோக்கத்தை திசை திருப்பும் முயற்சி" அமலாக்கத்துறை சோதனை குறித்து மு.க.ஸ்டாலின் விமர்சனம்

**சென்னை , ஜூலை. 18– அமலாக்கத்துறை சோதனை குறித்து திமுக கிஞ்சித்தும் கவலைப்படவில்லை என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**



எதிர்க்கட்சிகளின் 2 நாள் ஆலோசனைக் கூட்டம் பெங்களூருவில் நேற்று தொடங்கியது. 24–க்கும் மேற்பட்ட தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். இந்த கூட்டத்தில் கலந்து கொள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை விமானம் மூலம் சென்னையில் இருந்து பெங்களூரு புறப்பட்டு சென்றார். முன்னதாக சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், "மத்தியில் ஆட்சி பொறுப்பில் உள்ள பாஜகவை வீழ்த்த வேண்டும் என்று என்பதற்காகஇந்தியாவில் உள்ள பல்வேறு எதிர்கட்சிகள் ஒன்று சேர்ந்து ஏற்கனவே பிஹார் மாநிலம் பாட்னாவில் எதிர்க்கட்சிதலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து இன்றும், நாளையும் 2 நாட்கள் கர்நாடகாவின் பெங்களூருவில் எதிர்க்கட்சிதலைவர்களின் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் 24 கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர். பாஜகவை வீழ்த்த பிஹார், கர்நாடகா என தொடர்ந்து கூட்டப்படக் கூடிய கூட்டம், பாஜக ஆட்சிக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. இதன் வெளிபாடு தான், அமலாக்கத்துறை அவர்களால் ஏவப்படப்பட்டுள்ளது. ஏற்கனவே வடமாநிலத்தில் இந்த பணியை செய்து கொண்டு இருந்தவர்கள், தற்போது தமிழகத்திலும் இந்த பணியை தொடங்கி உள்ளார்கள்.

அமலாக்கத்துறை சோதனை குறித்து திமுக கிஞ்சித்தும் கவலைப்படவில்லை. உயர்கல்வி துறை அமைச்சர் பொன்முடி வீட்டில், அமலாகத்துறை சோதனை நடத்தப்பட்டு வருகிறது. இந்த வழக்கு ஜெயலலிதா முதல்வராக இருந்த போது, புனையப்பட்ட பொய் வழக்கு. 13 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட வழக்கு. 10 ஆண்டுகால அதிமுக ஆட்சிநடைபெற்றபோது, இந்த வழக்கில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

அண்மையில் பொன்முடிமீதுகடந்தகால ஆட்சியில் சுமத்தப்பட்ட 2 வழக்குகளில் இருந்து அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இதை வழக்கை சட்ட ரீதியாக அவர் எதிர்கொள்வார். இதற்கெல்லாம் நாடாளுமன்ற தேர்தலில் பதில் அளிக்க மக்கள் தயாராக உள்ளார்கள். எதிர்க்கட்சிகளின் கூட்டத்தின் நோக்கத்தை திசை திருப்ப பாஜக செய்துகொண்டுஇருக்கும் தந்திரம்தான் இது" என்று தெரிவித்தார்.

## அறந்தாங்கியில் கொட்டும் மழையில் கருணாநிதியின் கவியரங்கம் குடைபிடித்து ரசித்த அமைச்சர்கள்

**அறந்தாங்கி, ஜூலை. 18– அறந்தாங்கியில் கொட்டும் கனமழையில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் சாதனை குறித்த கவிதைகளை சட்டத்துறை அமைச்சர் ரகுபதியும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்கள் மெய்யநாதனும் குடைபிடித்து நின்றவாறு கேட்டு மகிழ்ந்தனர்.**



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே ராஜேந்திரபுரத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி நூற்றாண்டு பிறந்தநாள் கவியரங்கம் நடைபெற்றது. புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் ஆலங்குடி தொகுதிக்கு உட்பட்ட ராஜேந்திரபுரத்தில் நடந்த கவியரங்கத்திற்கு சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தலைமை வைத்தார். சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் வரவேற்றார். கவிஞர் விவேகா தலைமையில் வரலாற்று தலைவர் வான் புகழ் கலைஞர் என்ற தலைப்பில் கவிஞர்கள் ஆண்டாள் பிரியதர்ஷினி, ரவி பாரதி, தஞ்சை இனியன், கங்கை மணிமாறன், இளையகம்பன் ஆகியோர் கலந்து கொண்ட கவியரங்கம் நடைபெற்றது. கவியரங்கத்தில் அறந்தாங்கி ஒன்றிய சேர்மன் மகேஸ்வரி சண்முகநாதன் அறந்தாங்கி சேர்மன் ஆனந்த் மாவட்ட கவுன்சிலர் சரிதா மேகராஜன் கிழக்கு ஒன்றிய செயலாளர் குமார் நிர்வாகிகள் துளசிராமன், செந்தமிழ் செல்வன், நல்ல கூத்தன், கருணாநிதி, மணிமொழியன், மன்னகுடிசோமு.கண்ணன் ராஜேஸ்வரி செல்வம். குணவிநாயகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக ஒன்றிய அவை தலைவர் கருணாநிதி நன்றி கூறினார். கவியரங்க முடிவில் கனமழை பெய்தபோது அந்த கனமழையின் போது கவியரங்கில் முன்னாள் முதல்வர் கருணாநிதி சாதனைகள் குறித்து கவிஞர்கள் பேசியதை சட்டத்துறை அமைச்சர் ரகுபதியும் சுற்றுச்சூழல் துறை அமைச்சின் மெய்யநாதனும் கொட்டும் மழையில் குடை பிடித்தவாறு நின்று கேட்டு மகிழ்ந்தனர். கனமழை பெய்தாலும் கூட்டத்திற்கு வந்திருந்த ஆண்களும் பெண்களும் கூட்டம் நடந்த பகுதியிலுள்ள கடைகளின் சாலை ஓரத்தில் ஒதுங்கி நின்று முன்னாள் முதல்வரின் சாதனை கவிதைகளை கேட்டு மகிழ்ந்தனர்.

## டாலருக்கு பதிலாக ரூபாய், திர்ஹாமில் வர்த்தகம் இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் இடையே ஒப்பந்தம்

**புதுடெல்லி , ஜூலை. 18– பிரதமர் மோடி சனிக்கிழமை ஐக்கிய அரபு அமீரகத்தில் அரசு முறை பயணம் மேற்கொண்டார். அந்த நாட்டு அதிபர் ஷேக் முகமதுவை சந்தித்துப் பேசினார். அப்போது அமெரிக்க டாலருக்கு பதிலாக இந்தியாவின் ரூபாய், அமீரகத்தின் திர்ஹாமில் இருதரப்பு வர்த்தகத்தை மேற்கொள்ள ஒப்பந்தம் கையெழுத்தானது.**



சர்வதேச அளவில் அமெரிக்காவின் டாலர் மூலம் வர்த்தகம் மேற்கொள்ளப்படுகிறது. உக்ரைன்போர் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் உலக வர்த்தகத்தில் டாலரின் ஆதிக்கத்தை குறைக்க ரஷ்யா, சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் தீவிர முயற்சி செய்து வருகின்றன. இந்த சூழலில் இந்திய ரூபாய்சர்வதேசநாணயமாக மாறுவதற்கான வாய்ப்பு பிரகாசமாகியுள்ளது.

இப்போதைய நிலையில் ஜெர்மனி, பிரிட்டன், நேபாளம், பூடான், சிங்கப்பூர், இலங்கை, மாலத்தீவு, வங்கதேசம், கென்யா, மலேசியா, ரஷ்யா உள்ளிட்ட 18 நாடுகள் இந்திய ரூபாய் அடிப்படையிலான வர்த்தகத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த பட்டியலில் தற்போது ஐக்கிய அரபு அமீரகமும் இணைந்துள்ளது.

இது குறித்து இந்திய வெளியுறவு துறை வட்டாரங்கள் கூறியதாவது:

இந்திய ரூபாயை சர்வதேச நாணயமாக மாற்ற மத்திய அரசு தீவிரநடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சவுதி அரேபியா உள்ளிட்ட மேலும் 35 நாடுகள் இந்திய ரூபாயில் வர்த்தகம் மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன.

முந்தைய காலத்தில் வளைகுடா நாடுகளுடன் இணைந்து சர்வதேச அரங்கில் காஷ்மீர் விவகாரத்தை பாகிஸ்தான் எழுப்பி வந்தது. இப்போது பாகிஸ்தான் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளது.

மத்திய அரசின் முயற்சியால் இந்தியா, பிரான்ஸ், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் இணைந்து இந்தோ–ஆபிரகாமிக் கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தகூட்டணி நாடுகளின் கடற்படை சார்பில் கடந்த ஜூன் 8, 9–ம் தேதிகளில் கூட்டு போர் பயிற்சி நடத்தப்பட்டது.

அதோடு மத்திய அரசின் முயற்சியால் இந்தியா, இஸ்ரேல், ஐக்கிய அமீரகம் ஆகிய நாடுகள் இணைந்து 'I2U2' என்ற கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் சவுதி அரேபியாவும் விரைவில் இணையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மும்பை நிழல் உலக தாதா தாவூத் இப்ராகிம், அமீரகத்தின்துபாய்நகரை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வந்தார். இந்தியா, அமீரகம் இடையிலான உறவு வலுவடைந்து வருவதால் தாவூத்பாகிஸ்தானிலேயே முடக்கப்பட்டு உள்ளார்.

மேலும் அமீரகம், சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகளின் உதவியோடு வளைகுடா நாடுகளின் ஹவாலா பணப் பரிமாற்றத்துக்கு எதிராக தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் இந்தியாவில் தீவிரவாத அமைப்புகள் அழிந்து வருகின்றன.

இவ்வாறு இந்திய வெளியுறவுத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியாவுக்கான ஐக்கிய அரபு அமீரக தூதர் அப்துல் நாசர் கூறியதாவது:

இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் நம்பகமான நட்பு நாடுகளாகும். பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில் இரு நாடுகள் இடையிலான உறவு மேலும் வலுவடைந்து வருகிறது. எரிசக்தி, உணவு தானியங்கள், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுகின்றன.

ரூபாய், திர்ஹாமில் வர்த்தகம் மேற்கொள்ள ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இந்தியாவின் யுபிஐ, ஐக்கிய அரபு அமீரகத்தின் ஐபிபி பணப் பரிவர்த்தனை நடைமுறைகள் இணைக்கப்பட உள்ளன. இவற்றின் மூலம் இருதரப்பு பொருளாதாரம் வரலாறு காணாத வளர்ச்சி அடையும்.

இவ்வாறு அப்துல் நாசர் தெரிவித்தார்.

## 13 மணிநேர சோதனைக்கு பின் அமலாக்கத்துறை விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்டார் பொன்முடி

**சென்னை , ஜூலை. 18– தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி வீட்டில் நடைபெற்ற 13 மணி நேர சோதனைக்கு பின் விசாரணைக்காக அமலாக்கத்துறை அதிகாரிகள் அவரை அவரது காரில் அழைத்துச் சென்றுள்ளனர்.**





தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத் துறையினர் நடத்தி வரும் சோதனையில், ரூ.10 லட்சம் மதிப்பிலான வெளிநாட்டு கரன்சிகள் மற்றும் ரூ.70 லட்சம் மதிப்பிலான இந்திய ரூபாய் உள்பட மொத்தம் ரூ.80 லட்சம் கைப்பற்றப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி வீட்டில் நேற்று காலை சுமார் 7.30 மணி முதல் அமலாக்கத் துறை சோதனை நடைபெற்று வருகிறது. சென்னை மற்றும் விழுப்புரத்தில் அமைச்சர் பொன்முடிக்கு தொடர்புடைய 9 இடங்களில் இந்த சோதனை நடைபெற்று வருகிறது. அமைச்சர் பொன்முடியின் மகன் கவுதம சிகாமணி எம்.பி வீட்டிலும் அமலாக்கத் துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர்.

சென்னை சைதாப்பேட்டை மற்றும் விழுப்புரம் சண்முகபுரத்தில் உள்ள அமைச்சர் பொன்முடியின் வீடுகளில் சோதனை நடைபெற்று வருகிறது. மேலும், விழுப்புரம் விக்கிரவாண்டியில் உள்ள சூர்யா அறக்கட்டளைக்கு சொந்தமான பொறியியல் கல்லூரி வளாகத்திலும் அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். துப்பாக்கி ஏந்திய மத்திய ரிசர்வ் படை பாதுகாப்புடன் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். சென்னை சைதாப்பேட்டை ஸ்ரீநகர் காலனியில் உள்ள பொன்முடி இல்லத்துக்கு வந்த தடய அறிவியல் நிபுணர்கள், ஆவணங்கள் ஏதும் அழிக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து ஆய்வு செய்தனர்.

இந்நிலையில், இந்த சோதனையின்போது, அமைச்சர் பொன்முடிக்கு சொந்தமான இடங்களில் இருந்து ரூ.10 லட்சம் மதிப்பிலான அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட வெளிநாட்டு கரன்சிகள் மற்றும் ரூ.70 லட்சம் மதிப்பிலான இந்திய ரூபாய் உள்பட மொத்தம் ரூ.80 லட்சத்தை அமலாக்கத் துறையினர் கைப்பற்றியுள்ளதாக கூறப்படுகிறது. மேலும், இந்தப் பணம் குறித்து அமைச்சர் பொன்முடியிடம் அமலாக்கத் துறை எழுப்பிய கேள்விக்கு, அமைச்சர் உரிய விளக்கம் அளிக்கவில்லை என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இதைத்தொடர்ந்து, கணக்கில் காட்டப்படாத பணம் என்பதால், அந்தத் தொகையை அமலாக்கத் துறையினர் பறிமுதல் செய்துள்ளனர். மேலும், அமலாக்கத் துறை சோதனை நடைபெற்று வரும் சென்னையில் உள்ள அமைச்சர்பொன்முடியின் இல்லத்துக்கு காலை முதலே பல்வேறு துறையைச் சேர்ந்த அதிகாரிகள் வரவழைக்கப் பட்டுள்ளனர். டிஜிட்டல் பரிவர்த்தனைகள் தொடர்பான அதிகாரி, வங்கிக் கணக்கு விவரங்கள் தொடர்பான அதிகாரி வந்தனர். இதைத்தொடர்ந்து இந்தியன் வங்கியின் நகை மதிப்பீட்டாளர்கள் இருவரும் வரவழைக்கப் பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக செம்மண் எடுத்ததாக அமைச்சர் பொன்முடி, அவரது மகன் கவுதம சிகாமணி உள்ளிட்டோருக்கு எதிரான வழக்கின் விசாரணைக்கு தடை விதிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்து கடந்த ஜூன் 19–ம் தேதி உத்தரவிட்டிருந்தது குறிப்பிடதக்கது.

காலை முதல் இரவு வரை 13 மணி நேரம் நடந்த சோதனைக்கு பின் விசாரணைக்காக இரவு 8 மணி அளவில் நுங்கம்பாக்கம் சாஸ்திரி பவனில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்திற்கு பொன்முடி மற்றும் அவரது மகன் கௌதம் சிகாமணி ஆகியோரை அழைத்துச் சென்றுள்ளனர். இது திமுகவினரிடையேபீதியை ஏற்படுத்தியுள்ளது.

# இன்று

| | | |
|---|---|---|
| **18-7-2023** | | |
| அரசியல் தலைவியின் வைத்துக்கொண்டால் பேன் தொல்லை நீங்கும் | | |
| சக வருடம் 1945 ஆஷாடம் 27 | | |
| சோபகிருது ஆடி 2 | JUL - TUE செவ்வாய் | துல்ஹிஜ்ஜா 29 |
| | வளர்பிறை 199 / 166 | |

பிரதமை 50.45 (கா.02.18) புனர்பூசம் 00.20 (கா. 06.08) சித்தம் 22.25 அகஸ் 31.18 சித்த. கரிநாள். திருமெய்யம் சத்தியமூர்த்தி புறப்பாடு. திருவாடானை ஸ்ரீசிநேகவல்லியம்மன் வெள்ளி ரிஷப வாகன புறப்பாடு. நயினார்கோவில் சௌந்திரநாயகி கோலாட்ட அலங்கார காட்சி. நந்தம் மரியம்மன் பவனி.

| | நல்லநேரம் | கௌரி நல்ல | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.45-8.45 | 10.45-11.45 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை | 5.00-6.00 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; கடக லக்னம் இருப்பு நா. 5 வி. 20; சந்திராஷ்டமம் : மூலம்; கரணம் : 7.30-9; சூரிய உதயம் : 6.01

ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு

இராசிபலன்

| | |
|---|---|
| மேஷம் | நிறைவு |
| ரிஷபம் | நலம் |
| மிதுனம் | கவலை |
| கடகம் | சாதனை |
| சிம்மம் | சினம் |
| கன்னி | கவனம் |
| துலாம் | விருத்தி |
| விருச்சி | அலைச்சல் |
| தனுசு | தடங்கல் |
| மகரம் | தாமதம் |
| கும்பம் | வெற்றி |
| மீனம் | யோகம் |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

தீக்குச்சி தீப்பெட்டியிடம் கேட்டது,
நீயும் நானும் ஒவ்வொரு முறை
உரசும்போதும் நானே பற்றி
எரிகிறேன், நீ எரிவதில்லையே
ஏன்?

தீப்பெட்டி சொன்னது...தலைக்கனம்
உள்ளவர்கள் விரைவில்
அழிந்துபோவார்கள்








▶ புதுக்கோட்டை பேலஸ் சிட்டி ரோட்டரி சங்கத்தின் 28 ஆம் ஆண்டு பணி ஏற்பு விழா நடைபெற்றது. தலைவராக பாஸ்கரன். செயலாளராக முருகையன். பொருளாளராக சிவானந்தம் ஆகியோர் பணியேற்று கொண்டனர். அவர்களுக்கு அழகப்பா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் சுப்பையா சிறப்புரையில் 2025 - 26 ஆம் ஆண்டு மாவட்ட ஆளுநர் கார்த்திக் பணியில் அமர்த்தி வாழ்த்தினர். நிகழ்வில் தேசிய நல்லாசிரியர் விருதாளர் கவிஞர் தங்கம் மூர்த்தி, மண்டல ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி, துணை ஆளுநர் கவிதா ராஜசேகரன், முன்னாள் தலைவர் வேலுச்சாமி செயலாளர், பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

# ஊழலில் பணம் சேர்ப்பவர்களுக்கு விவசாயம் கேவலமாகத்தான் தெரியும் ஆ.ராசாவுக்கு அண்ணாமலை பதிலடி

சென்னை, ஜூலை. 18-
கலைஞரின் பேனா முனை கவுண்டர்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து இருக்காவிட்டால் அண்ணாமலை ஐ.பி.எஸ். படித்து இருக்க முடியாது. ஆடுதான் மேய்த்து இருப்பார். எடப்பாடி பழனிசாமி வெல்லமண்டி வைத்திருப்பார். வானதி சீனிவாசன் கூடை வேய்ந்து இருப்பார் என்று தி.மு.க. துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா பொதுக்கூட்டத்தில் பேசியிருந்தார்.



இதற்கு பதில் அளித்து தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலைவெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறி இருப்பதாவது:- ஊழல் செய்து மக்கள் பணத்தைத் திருடியவர்கள் ஜம்பமாக வலம் வரும்போது, ஆடு மேய்ப்பது, வெல்லமண்டி வைத்திருப்பது, கூடை பின்னுவது போன்ற விவசாயம் சார்ந்த தொழில்கள் ஆ.ராசாவுக்கு கே வலமான தொழில்களாகத்தான் தெரியும். கொங்கு செழித்தால் எங்கும் செழிக்கும் என்ற சொல்லாடல், கலைஞர் கருணாநிதி பிறக்கும் முன்னரே வழக்கத்தில் உள்ளது என்பதை ராசாவுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

கொங்கு பகுதிக்கு தி.மு.க. செய்ததுஎன்னவென்றால், 1970-ம் ஆண்டு கொங்கு பகுதியில் மின்சாரக் கட்டணத்தை குறைக்கக்கோரி போராடிய மூன்று விவசாயிகளைச் சுட்டுக்கொன்றதுதான். கடும் உழைப்புக்கு பெயர் போன கொங்கு மக்களை அசிங்கப்படுத்துவதை ஆ.ராசா நிறுத்திக்கொள்ள வேண்டும். யார் முன்னேற்றத்துக்காவது தனது கட்சி தலைவர் பெயரில் ஸ்டிக்கர் ஒட்ட வேண்டும் என ஆ.ராசா விரும்பினால், சைக்கிளில் நீதிமன்றம் சென்ற அவர் உள்ளிட்ட தி.மு.க.வினர், இன்று பல ஆயிரம் கோடி சொத்துக்கு அதிபதியாக இருப்பதற்கு வேண்டுமானால் கருணாநிதி ஸ்டிக்கர் ஒட்டிக்கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

# திருச்சி: வழக்கை சாதகமாக முடித்து தர ரூ.3,000 லஞ்சம் பெற்ற பெண் எஸ்.ஐ. கைது

திருச்சி, ஜூலை. 18-
கேரள மாநிலம் கோட்டயத்தைச் சேர்ந்தவர் சரத். இவரது மனைவி அஜிதா. இவர் திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் பகுதியில் முறையாக உரிமம் பெற்று கேரளா ஆயுர்வேதிக் மசாஜ் சென்டரை நடத்தி வருகிறார். இந்த மசாஜ் சென்டர் மீது திருச்சி கண்டோன்மெண்ட் விபச்சார தடுப்பு பிரிவு போலீசார் கடந்த ஏப்ரல் மாதம் வழக்கு பதிவு செய்துள்ளனர். இந்த வழக்கில் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே இந்த வழக்கை அஜிதாவிற்கு சாதகமாக முடித்து தருவதற்காகவும் மேலும் குண்டாஸ் வழக்குபதிவு செய்ய பரிந்துரை செய்யாமல் இருப்பதற்காகவும் ரூ.10,000 லஞ்சமாக, விபச்சார தடுப்பு பிரிவு சப் இன்ஸ்பெக்டர் ரெமா கேட்டுள்ளார். ஆனால் தன்னிடம் அவ்வளவு தொகை



தற்போது இல்லை என அஜிதா கூறியுள்ளார். இருந்த போதிலும் ரூ. 3000 கொடுத்தால் உனது வழக்கை உனக்கு சாதகமாக முடித்து தர முடியும் என்று கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத அஜிதா, திருச்சி லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் செய்தார்.

இதனை தொடர்ந்து லஞ்ச ஒழிப்பு போலீசார் கொடுத்த அறிவுரையின்படி, அஜிதா, போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ரெமாவிடம் ரூபாய் மூன்றாயிரம் கொடுத்தார். அப்போது அங்கு மறைந்திருந்த டிஎஸ்பி மணிகண்டன் தலைமையிலான ஆய்வாளர் சக்திவேல், சேவியர் ராணி, பிரசன்ன வெங்கடேஷ், பாலமுருகன் மற்றும் போலீசார் லஞ்சப் பணம் பெற்ற ரெமாவை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர்.

கைதான ரெமா விபச்சார தடுப்பு பிரிவில் கடந்த நான்கு வருடங்களாக பணியாற்றி வருகிறார். திருச்சி மாநகரத்தை பொருத்தவரையில் 60 ஸ்பா சென்டர்கள் இயங்கி வருகிறது. ஒரு ஸ்பா சென்டருக்கு மாதம் 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை ரெமோ தனது வங்கி கணக்கிற்கு கூகுள் பே மூலம் மாதா மாதம் லஞ்சமாகப்பெற்று தனது உயர் அதிகாரிகளுக்கும் பிரித்துக் கொடுத்து வந்ததாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. மேலும் எஸ்.ஐ. ரெமா உயர் அதிகாரிகள் யார் யாருக்கு எவ்வளவு தொகை கொடுத்துள்ளார் என்ற விபரங்களை லஞ்சம் கொடுத்தார் என்ற விசாரணையும் நடந்து வருகிறது.






# ஆடி அமாவாசையொட்டி சுருளி அருவியில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து வழிபாடு

தேனி, ஜூலை. 18-
ஆடி அமாவாசையை யொட்டி சுருளி அருவியில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து வழிபாடு இதுவரையில் இல்லாத நிகழ்வாக நேற்று நடைப்பெற்றது.

தைமுதல்ஆனிமாதம்வரை உள்ள பொழுது தேவர்களுக்கு பகல் பொழுதாகவும், ஆடி முதல் மார்கழி வரை இரவு பொழுதாகவும் கருதப்படுகிறது. இதன் அடிப்படையில் பகல் காலம் முடிவடைந்து இரவு தொடங்கும் நேரமாக ஆடி மாதம் கருதப்படுகிறது. இந்த காலத்தை தட்சிணாயண புண்ணிய காலம் என்று அழைப்பார்கள். அதன்படி இந்த வருடம் ஆடி மாதம் முதல் நாளிலும், 31-ம் நாளிலும் 2 அமாவாசை வருகிறது. இது போன்ற விசித்திரமான மாதத்தை மலை மாதம் என்றும் அழைப்பதுண்டு. வழக்கமாக எல்லா அமாவாசை நாட்களும் தர்ப்பணம் செய்வதற்கு உகந்ததாக இருந்தாலும், ஆடி, தை, புரட்டாசி ஆகிய மாதங்களில் வரும் அமாவாசை சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.

அதன்படி ஆடி மாத பிறப்பின் முதல் நாளில் அமாவாசை வருவதால் நேற்று பல்வேறு இடங்களில் புண்ணிய நதிகளில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. தேனி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற சுற்றுலா தலமாகவும், ஆன்மீக தலமாகவும், சுருளி அருவி விளங்கி வருகிறது. இங்கு



தேனி மாவட்டம் மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும்புனித நீராடி தர்ப்பணம் செய்ய பக்தர்கள் கூடுவது வழக்கம்.

கடந்த சில நாட்களாக யானைகள் நடமாட்டம் எதிரொலியாக சுருளி அருவியில் பக்தர்கள் நீராட தடை விதிக்கப்பட்டு இருந்தது. ஞாயிற்றுக்கிழமை முதல் இந்த தடையை வனத்துறையினர் நீக்கினர். இதனையடுத்து நேற்று காலை முதல் பல்வேறு ஊர்களில் இருந்து ஏராளமான பொதுமக்கள் சுருளி அருவிக்கு வரத் தொடங்கினர். அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியதால் அதில் ஆனந்தமாக நீராடி அதன் பின் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்தனர்.

பின்னர் இங்குள்ள விஸ்வநாதர், பூதநாராயணன் கோவிலிலும் வழிபாடு செய்தனர். இதுமட்டுமின்றி அன்னதானமும் வழங்கப்பட்டது. கடந்த சில நாட்களாக களையிழந்து காணப்பட்ட சுருளி அருவி பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் வருகையால் கூட்டம் அலைமோதியது. இங்குள்ள கடைகளில் வியாபாரம் அதிகரித்ததால் வியாபாரிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.

# அமைச்சர் பொன்முடிக்கு எதிரான அமலாக்கத்துறை சோதனைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

சென்னை, ஜூலை. 18-
அமைச்சர் பொன்முடி மற்றும் அவரது குடும்பத்தினர் மீது அமலாக்கத்துறை சோதனை தாக்குதல் நடத்தி வருவதாகக் கூறி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: ”ஒன்றிய அரசின் அதிகாரத்தை பாஜக அரசியல் ஆதாயம் தேடும் மலிவான செயலுக்கு பயன்படுத்தி வருகிறது. குறிப்பாக அமலாக்கத்துறை சட்ட விதிகள், விசாரணை முறைகள் என அனைத்து வழிகளிலும் அத்துமீறி, எதிர்கட்சித் தலைவர்கள் மீது தாக்குதல் நடத்தும் ஆயுதமாக பயன்படுத்தப்படுகின்றது. அண்மையில் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி மீது பணப்பரிமாற்ற குற்றச்சாட்டில் சோதனை என்ற பெயரில் கடுமையாக நெருக்கடியும், நிர்பந்தமும் கொடுத்ததன் காரணமாக அவர் உயிருக்கு ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டு நீதிமன்ற காவலில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தமிழ்நாடு அரசின் இலாகா இல்லாத அமைச்சராக இருந்து வரும்



வி.செந்தில் பாலாஜியை அரசியல் அமைப்புச் சட்டம் முதலமைச்சருக்கு வழங்கியுள்ள விருப்புரிமை அதிகாரத்திற்கு எதிராக ஆளுநர் செயல்பட்டு அமைச்சர் பொறுப்பிலிருந்து வி.செந்தில் பாலாஜியை நீக்கம் செய்வதாக அறிவித்தார். பின்னர் உடனடியாக அதனை நிறுத்தி வைப்பதாக அறிவித்த கேலிக் கூத்து செயலால் பாஜகவின் சாயம் வெளுத்து போனது.

தற்போது உயர்கல்வித்துறை அமைச்சர் க. பொன்முடி மற்றும் அவரது குடும்பத்தினர் மீது அமலாக்கத்துறை சோதனை தாக்குதல் நடத்தி வருகிறது. முந்தைய ஆட்சியால் சொத்து குவிப்பு மற்றும் நில அபகரிப்பு குற்றம்சாட்டப்பட்ட வழக்குகளில் இருந்து அமைச்சர் பொன்முடியும் அவரது குடும்பத்தினரும் அண்மையில் தான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் மீதான வழக்குகளை சட்டரீதியாக சந்திக்க அவர்கள் ஒரு போதும் தயக்கம் காட்டியதில்லை. தப்பித்துக் கொள்ள குறுக்கு வழி தேடியதும் இல்லை. இந்த நிலையில் அமலாக்கத்துறை கூறும் குற்றச்சாட்டையும் எதிர்கொண்டு முறியடிப்பார்கள் என்பது உறுதியாகும்.

ஆனால், அமலாக்கத்துறையின் தலைவர் பொறுப்பில் மூன்றாவது முறையாக பதவி நீடிப்புப் பெற்று, பாஜகவின் அரசியல் முகவராக செயல்பட்டு வரும் தலைவரின் தகுதியை நாடு நன்கு அறிந்துள்ளது. ஆர்எஸ்எஸ் வழி நடத்தும் பாஜகவை ஒன்றிய அரசின் அதிகாரத்தில் இருந்து வெளியேற்ற, வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு எதிர்கட்சிகள் ஒன்றிணைந்து வருகின்றன. (17, 18, ஜூலை 2023) பெங்களூருவில் கூடும் எதிர்கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்ப அமலாக்கத்துறையை பாஜக ஒன்றிய அரசு பயன்படுத்தி இருக்கும் மலிவான செயலை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.'' இவ்வாறு முத்தரசன் தெரிவித்துள்ளார்.

# “அதிகாரப் பசிகொண்ட சந்தர்ப்பவாதிகளின் ஆலோசனைக் கூட்டம்” பாஜக விமர்சனம்

புதுடெல்லி, ஜூலை. 18-
பெங்களூருவில் நடப்பது அதிகாரப் பசியில் இருக்கும் சந்தர்ப்பவாதிகளின் ஆலோசனைக் கூட்டம் என்று பாஜக விமர்சித்துள்ளது.

வரும் 2024-ம் ஆண்டு நடைபெறும் மக்களவை தேர்தலில், ஆளும் பாஜகவுக்கு எதிராக காங்கிரஸ், திரிணாமூல் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரள திட்டமிட்டுள்ளன. இதன்படி எதிர்க்கட்சி தலைவர்களின் முதல் ஆலோசனை கூட்டம், பிஹார் முதல்வர் நிதிஷ்குமார் ஏற்பாட்டில், கடந்த ஜூன் 23-ம் தேதி பாட்னாவில் நடைபெற்றது. இதில் திமுக உள்ளிட்ட 17 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர். இதைத் தொடர்ந்து, எதிர்க்கட்சிகளின் 2-வது ஆலோசனை கூட்டம் பெங்களூருவில் நேற்று தொடங்கியது, இன்றும் நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை கர்நாடக காங்கிரஸ் தலைவரும், துணை முதல்வருமான டி.கே. சிவகுமார் செய்து வருகிறார். இந்தக் கூட்டத்தில் 24-க்கும் மேற்பட்ட கட்சிகள் கலந்து கொள்கின்றன.

இந்தக் கூட்டம் குறித்து செய்தியாளர்கள் சந்திப்பில் பாஜக மூத்த தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரவி சங்கர் பிரசாத் பேசுகையில், "பெங்களூருவில் நடைபெறும் பாஜக கூட்டம் அதிகாரப்பசியில் இருக்கும் சந்தர்ப்பவாதிகளின் ஆலோசனைக் கூட்டம். டெல்லியில் மக்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், அங்கே இருந்து மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ளாமல் பெங்களூரு செல்கிறார் அரவிந்த் கேஜ்ரிவால். இதுபற்றியெல்லாம் காங்கிரஸ் வாய் திறக்கவே இல்லை. அதேபோல் மேற்குவங்கத்தில் பஞ்சாயத்து தேர்தலின்போது நடந்த வன்முறை பற்றி காங்கிரஸ் மவுனம் காக்கிறது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் அரசியல் கட்சிகளுக்கு என்று ஒருமித்த கொள்கை ஏதும் இல்லை. ஒன்றைக் கொடுத்து ஒரு ஆதாயத்தைப் பெற்றுக் கொள்வதே அவர்களின் கொள்கை. ஆகையால் இது மக்கள் நலனுக்கான ஆலோசனைக் கூட்டம் இல்லை அதிகாரப்பசி உள்ள சந்தர்ப்பவாதிகளின் கூட்டம்" என்றார்.

# ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவுக்கு ஒரே நாளில் 5 வெள்ளி 27 பதக்கங்களுடன் பட்டியலில் 3-வது இடம்

பாங்காக், ஜூலை. 18-
ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவுக்கு ஒரே நாளில் 5 வெள்ளிப் பதக்கங்கள் கிடைத்தன. 27 பதக்கங்களுடன் இந்திய அணி பதக்கப் பட்டியலில் 3-வது இடத்தைப் பிடித்தது.



24-வது ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டி தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் நடைபெற்று வருகிறது. ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டுதல், ஹெப்டத்லான், கலப்பு தொடர் ஓட்டம், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல், உயரம் தாண்டுதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் ஆசிய தடகள சாம்பியன்ஷிப் தொடர் ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது. இந்த தொடரில் 6 தங்கப் பதக்கம் உள்பட மொத்தம் 27 பதக்கங்களை இந்தியா வென்றுள்ளது. இதைத் தொடர்ந்து 6 தங்கம், 12 வெள்ளி, 9 வெண்கலப் பதக்கம் என மொத்தம் 27 பதக்கங்களுடன் இந்தியா பதக்கப் பட்டியலில் 3-வது இடத்தைப் பிடித்தது.

பதக்கப் பட்டியலில் ஜப்பான் முதல் இடத்தையும், சீனா 2-வது இடத்தையும் பிடித்துள்ளன. இந்நிலையில் மகளிர் 200 மீட்டர் ஓட்ட பந்தயத்தில் இந்திய வீராங்கனை ஜோதி யாராஜி, 23.13 வினாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து 2-வது இடம் பிடித்தார். இதையடுத்து ஜோதி யாராஜி வெள்ளிப் பதக்கம் வென்று அசத்தினார்.

இந்த தொடரில் ஜோதி வென்ற 2-வது பதக்கம் இதுவாகும். நடப்பு தொடரில் ஏற்கெனவே மகளிருக்கான 100 மீட்டர் ஓட்ட பந்தயத்தில் ஜோதி யாராஜி தங்கப் பதக்கம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மகளிர் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் இந்திய வீராங்கனை பாருல் சவுத்ரி 2-வது இடம் பிடித்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். ஆடவர் ஈட்டி எறிதல் போட்டியில் இந்திய வீரர் டி.பி. மனு 2-வது இடம் பிடித்தார். இதையடுத்து இவருக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

மகளிர் குண்டு எறிதல் போட்டியில் இந்திய வீராங்கனை அபாகதுவா 2-வது இடம் பிடித்து வெள்ளிப் பதக்கத்தை வசப்படுத்தினார். இதேபோல் ஆடவர் 400 மீட்டர்தொடர் ஓட்டப் போட்டியில் இந்திய வீரர்கள் 2-வது இடம் பிடித்து வெள்ளிப் பதக்கத்தை வென்றனர். கடைசி நாளில் மட்டும் இந்திய அணிக்கு 5 வெள்ளிப் பதக்கங்கள் கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் அமைச்சர் செந்தில் பாலாஜி புழல் சிறைக்கு மாற்றம்

சென்னை, ஜூலை. 18-
சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் கைது செய்யப்பட்டு காவேரி மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த இலாகா இல்லாத அமைச்சரான செந்தில் பாலாஜி, அங்கிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு நேற்று 108 ஆம்புலன்ஸ் மூலமாக புழல் சிறைக்கு மாற்றப்பட்டார்.

சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் அமைச்சர் செந்தில் பாலாஜியை சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள அவரது அரசு இல்லத்தில் அமலாக்கத் துறையினர் கடந்த ஜூன் 14-ம் தேதி அதிகாலை கைது செய்தனர். அப்போது நுங்கம்பாக்கத்தில் உள்ள அலுவலகத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லும்போது, அவர் நெஞ்சு வலிப்பதாகக் கூறியதால், அண்ணா சாலையில் உள்ள ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆஞ்சியோகிராம் பரிசோதனையில், இதயத்துக்குச் செல்லும் முக்கிய ரத்தக் குழாய்களில் அடைப்பு இருப்பது தெரியவந்ததால், அவருக்கு பைபாஸ் அறுவை சிகிச்சை செய்ய மருத்துவர்கள் பரிந்துரைத்தனர். சென்னை கே.கே.நகர் இஎஸ்ஐ மருத்துவர்களும் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று தெரிவித்தனர். மருத்துவமனையில் செந்தில் பாலாஜியிடம் விசாரணை நடத்திய சென்னை அமர்வு முதன்மை நீதிமன்ற எஸ். அல்லி, அவரை ஜூன் 28-ம் தேதி வரை நீதிமன்ற காவலில் அடைக்க உத்தரவிட்டார்.

செந்தில் பாலாஜியின் மனைவி கேட்டுக் கொண்டதால், உயர் நீதிமன்ற உத்தரவுப்படி ஜூன் 15-ம் தேதி ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனைக்கு அவர் மாற்றப்பட்டார். மருத்துவர்கள் ஏற்கெனவே முடிவு செய்தபடி, அவருக்கு



கடந்த ஜூன் 21-ம் தேதி பைபாஸ் அறுவை சிகிச்சை நடைபெற்றது. அறுவை சிகிச்சைக்குப் பின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஜூன் 24-ம் தேதி அமைச்சர் செந்தில் பாலாஜி தனி அறைக்கு மாற்றப்பட்டார்.

இதையடுத்து, செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் முடிந்து கடந்த ஜூன் 28-ம் காணொலி வழியாக ஆஜரானார். இதைத் தொடர்ந்து, அவருடைய நீதிமன்ற காவலை, ஜூலை 26-ம் தேதி வரை நீட்டித்து சென்னை அமர்வு முதன்மை நீதிமன்ற நீதீபதி எஸ்.அல்லி உத்தரவிட்டிருந்தார்.

சட்ட விரோத பணபரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் அமலாக்கத் துறையினரால் கைது செய்யப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜியை விடுவிக்க கோரி அவரது மனைவி மேகலா தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவை விசாரித்த இரு நீதிபதிகள் அமர்வு, இரு வேறு தீர்ப்புகளை வழங்கியது. இதனால் வழக்கை விசாரிக்கும் மூன்றாவது நீதிபதியாக நீதிபதி சி.வி.கார்த்திகேயன் நியமிக்கப்பட்டார்.

செந்தில் பாலாஜியை காவலில் எடுத்து விசாரிக்க அமலாக்கத் துறைக்கு அதிகாரம் உள்ளது. ஏற்கெனவே இரு நீதிபதிகள் அமர்வில் இந்த வழக்கில் தீர்ப்பளித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி பரத சக்கரவர்த்தியின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாக, 3-வது நீதிபதி சி.வி.கார்த்திகேயன் தீர்ப்பளித்துள்ளார்.

இந்நிலையில், காவேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த அமைச்சர் செந்தில் பாலாஜியின் உடல் நிலை சரியானதைத் தொடர்ந்து,நேற்று காவேரி மருத்துவமனைக்கு வந்த சிறை அதிகாரிகள், செந்தில் பாலாஜியை மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்து புழல் சிறைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதைத்தொடர்ந்து, மாலை 4.40 மணிக்கு ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனையில் இருந்து, அமைச்சர் செந்தில்பாலாஜியை 108 ஆம்புலன்ஸ் (வண்டி எண் TN 20 G 3523) மூலமாக காவேரி மருத்துவமனையில் இருந்து புழல் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார். மேலும், புழல் 2 ஆவது சிறையில் அமைச்சர் செந்தில் பாலாஜியை அடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே, செந்தில் பாலாஜியைமீண்டும்காவலில் எடுத்து விசாரிப்பதற்கான நகர்வுகளில் அமலாக்கத் துறையின் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

18.07.2023 வரலாறு

### அனைத்து மக்கள் அரசியல் கட்சி தலைவர் ராஜேஸ்வரி பிரியா மீது

# அனைத்து கட்சியினர் சிங்கப்பூரில் வேலை வாங்கி தருவதாக பணம் மோசடியில் ஈடுபட்டதாக குற்றசாட்டு

சீர்காழி, ஜூலை.18-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே திருவெண்காடு காவல் நிலையத்தில் திமுக, பாமக மற்றும் சமூக ஆர்வலர்கள் அடுத்தடுத்து தொடர்ச்சியாக அனைத்து மக்கள் கட்சி தலைவர் ராஜேஸ்வரி பிரியா மீது நடவடிக்கை எடுக்கவும் புகார் மனு அளித்துள்ளனர்.



இவர் தொடர்ந்து தமிழக முதல்வர் மற்றும் அமைச்சர்கள், பாமக, நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட அனைத்து கட்சி தலைவர்கள் நிர்வாகிகள் மற்றும் சினிமா துறை பிரபலங்கள் ஆகியோர்களை பற்றி அவதூறு செய்திகளை பரப்பியும், தரைகுறைவாக பேசியும் தன்னை விளம்பரப் படுத்திக் கொள்ளவும் அதன் மூலம் பணம் சம்பாதிக்கும் நோக்கில் பிரபலங்களை கீழ்த்தரமாக பேசியும் தொடர்ந்து அநாகரிக செயலில் ஈடுபட்டு வரும் அனைத்து மக்கள் அரசியல் கட்சி தலைவர் ராஜேஸ்வரி பிரியா மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என திருவெண்காடு காவல் நிலையத்தில் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து தனித்தனியான புகாரை அளித்தனர்.



மேலும் ராஜேஸ்வரி பிரியா சிங்கப்பூரில் வேலை வாங்கி தருவதாக கூறி பல ஆண்கள் மற்றும் பெண்களிடம் பணம் பல லட்சம் வசூல் செய்து ஏமாற்றி மோசடியில் ஈடுப்பட்டு தலைமறைவாக இந்தியாவிற்கு ஓடி வந்து விட்டதாக ஏமாற்றப்பட்டவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

மேலும் தானே புயலில் பாதித்தவர்களும் உதவி செய்ய போவதாக கூறி அதிலும் பல லட்சத்தை வசூல் செய்து ஏழை மக்களுக்கு உதவாமல் பணத்தை தானே வைத்து கொண்டு ஏமாற்றி விட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது தொடர்பாக திருவெண்காடு போலீசார் புகார் மனுவை பெற்றுக் கொண்டு உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளனர்.

# சீர்காழியில் நடராஜர் சிலையின் மீது படமெடுத்து நின்ற 5அடி நீள நாகபாம்பு

சீர்காழி, ஜூலை.18-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே செங்கமேடு பகுதியில் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு வாடகை முறையில் அலங்காரம் செய்யும் நிறுவனத்தின் குடோன் உள்ளது. இந்த குடோவனில் நடராஜர் உள்ளிட்ட சுவாமி சிலைகள் போன்றவைகள் வாடகை விடுவதற்காக வைக்கப்பட்டுள்ளது.



இதில் நடராஜர் சிலை மீது சுமார் 5 அடி நீள நாகபாம்பு நடராஜரின் உடலை சுற்றிக்கொண்டு இருந்தது. இதனை பார்த்து அச்சம் அடைந்த பொதுமக்கள் இது குறித்து சீர்காழி பாம்பு பாண்டியனுக்கு தகவல் அளித்தார்.

தகவலின்படி அங்கு சென்ற பாம்பு பாண்டியன் நடராஜர் சிலையினை சுற்றிக்கொண்டு இருந்த பாம்பினை பிடிக்க முயன்றார். அந்த பாம்பு நடராஜர் சிலை கழுத்தின் மீது சுற்றி சுவாமி தலையின் படமெடுத்து அச்சுறுத்தியது. பின்னர் லாவகமாக நாகபாம்பினை பாண்டியன் பத்திரமாக பிடித்து அதனை ஆள் நடமாட்டம் இல்லாத வனபகுதியில் கொண்டுசென்று விட்டார். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# 1 கோடியே 12 லட்சம் மதிப்பீட்டில் பூம்புகார் எம்.எல்.ஏ., நிவேதா முருகன், கிராம சாலை பணி துவக்கி வைத்தார்





தரங்கம்பாடி, ஜூலை-18:

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் தரங்கம்பாடி தாலுக்கா திருச்சம்பள்ளி வல்லம் ஊராட்சி முதல் முக்கறும்பூர் ஊராட்சி வரை ரூ.1 கோடியே 12 லட்சம் மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறப்பு சாலை 3 கிலோ மீட்டர் வரையிலான பணிகள் தொடக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செம்பனார்கோவில் ஒன்றிய செயலாளர் நந்தினி ஸ்ரீதர் தலைமை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் மீனா ஒன்றிய துணைப் பெருந்தலைவர் பாஸ்கர் ஊராட்சி மன்ற தலைவர்கள் பூக்கடை குமார் துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் சிறப்பு அழைப்பாளராக பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி ஜேசிபி இயந்திரத்தை இயக்கி துவக்கி வைத்து பேசினார். தொடர்ந்து பொதுமக்களிடம் எம்எல்ஏ பேசுகையில் பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் மட்டும் 150 கிலோ மீட்டருக்கு ரூ. 24 கோடி நிதி ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு கிராமப்புற சாலைகளை பணிகள் துவக்கப்பட உள்ளது. அந்த வகையில் திருச்சம்பள்ளி வல்லம் ஊராட்சி முதல் முக்கரும்பூர் ஊராட்சி வரை பணி துவக்க விழா ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு கிராம ஊராட்சிகளிலும் பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளது என எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

இதில் மாவட்ட துணைச் செயலாளர் மு.ஞானவேலன், தஞ்சை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றிய செயலாளர்கள் அமுர்த.விஜயகுமார், எம். அப்துல் மாலிக், ஒன்றிய குழு உறுப்பினர் சாந்தி வேல்முருகன், ஊராட்சி மன்ற தலைவர்கள் விஸ்வநாதன், ராஜா, ராஜலிங்கம் மற்றும் திமுக நிர்வாகிகள் திருச்சம்பள்ளி வல்லம், முக்கறும்பூர் ஊராட்சி கிராம மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திருவொற்றியூரில் மாநில அளவில் நடைபெற்ற சிலம்பம் போட்டியில் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று சிலம்பம் சுற்றி அசத்தினர்

சென்னை, ஜூலை,18

*யுத்த வர்ம போர்க்கலை அகடாமி விளையாட்டு சங்கம், மற்றும் தமிழ்நாடு சிலம்ப கழகம், அகில இந்திய சிலம்பம் பிரீமியர் லீக் 7-7 அமைப்பு சங்கம் சார்பில் மாநில அளவிலான சிலம்பம் போட்டி நடைபெற்றது.



யுத்த வர்ம போர்க்கலை அகாடமி நிறுவனர் மாஸ்டர் சண்முகம் ஏற்பாட்டில் சென்னை திருவொற்றியூரில் பூந்தோட்ட பள்ளி மைதானத்தில் நடைபெற்ற சிலம்பம் போட்டியில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், தஞ்சாவூர், கோவை, திருச்சி, திண்டுக்கல், கடலூர், கூடலூர், நாமக்கல்,புதுக்கோட்டை ,திருவாரூர், உள்ளிட்ட 25 மாவட்டங்களில் இருந்து 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் போட்டியில் பங்கேற்றனர்.

ஐந்து வகையான சிலம்பம் போட்டியில் ஒற்றைக்கம்பு, இரட்டைக் கம்பு , வேல் கம்பு, வால் வீச்சு ,சுருள்வாள் வீச்சு உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றன. இதில் 5 வயது முதல்18 வரை சிறுவர்கள் சிறுமியர்கள், மற்றும் மாணவர்கள் போட்டி கலந்துகொண்டு சிலம்பம் சுற்றி அசத்தினார் . சிலம்பம் போட்டியில் பங்கேற்று தங்கள் பிள்ளைகள் சிலம்பம் சுற்றுவதை பார்த்த பெற்றோர்கள் கைதட்டி உற்சாகப்படுத்தினர்.

நிகழ்ச்சியில் சென்னை உயர்நீதிமன்றம் பாதுகாப்பு பிரிவு காவல் கூடுதல் துணை ஆணையர் லட்சுமணன் பங்கேற்று போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.



காரைக்காலில் நடைபெறும் ரயில்வே பணிகள் சம்பந்தமாக போக்குவரத்து துறை அமைச்சர் சந்திபிரியங்கா தலைமையிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் நாஜீம் மற்றும் பி. ஆர். சிவா மேலும் நாக தியாகராஜன் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் ஆகியோர் முன்னிலையிலும் ஆட்சியர் வளாகத்தில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மேலும் இக்கூட்டத்தில் துணை மாவட்ட ஆட்சியர் ஜான்சன் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சிதம்பரநாதன் ரயில்வே துறையைச் சேர்ந்த பொறியாளர்கள், வர்த்தகசபை உறுப்பினர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில் காரைக்காலில் நடைபெறும் ரயில்வே பணிகளை விரைவாக முடிக்க ஆலோசனை கூறப்பட்டது.



கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. சென்னை வடக்கு மாவட்டம் வழக்கறிஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் இரவிச்சந்திரன் ஏற்பாட்டில் சென்னை புதுவண்ணாரப்பேட்டை கிராஸ் ரோடு பெரியார் பூங்கா அருகே நடைபெற்றது . நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா,தலைமை வழக்கறிஞர் கே.மறைமலை ஆர்கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர்,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் என்.மருதுகனேஷ் கலந்து கொண்டு கலைஞர் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி நலதிட்டங்களை வழங்கினார்கள்



தமிழ்நாடு முதலமைச்சர் வழிக்காட்டுதலின்படி, இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 49வது வட்டத்தில் அமைந்துள்ள புனித தெரசாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழாவில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி பங்கேற்று மாணவியர்கள் மத்தியில் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துரைத்து, அனைவரும் இரண்டிற்கு மேற்பட்ட பட்டப்படிப்புகள் படித்து உயர் பதவிகளை அடையுமாறு உரையாற்றியும் மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கியும் சிறப்பித்தார். இந்நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியப் பெருமக்கள், வட்ட செயலாளர் காட்டன் சதிஷ் குமார் மற்றும் நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் பயனாளிகள் தேர்வு செய்யும் பணியாளர்களுக்கான பயிற்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இந்த பயிற்சி பயிலரங்கத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் ஞானப்பிரகாசம் முன்னிலையில் மாவட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சரவணன்,மேற்பார்வையில் நடைபெற்றது. இந்த பயிற்சியினை பயிற்சி ஒருங்கிணைப்பாளர் ரேவதி நடத்தினார். இந்த பயிற்சியில் தன்னார்லர்கள் 110 பேர் கலந்து கொண்டனர்.



தியாகிகள் தினமான நேற்று கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள தியாகி சங்கரலிங்கனார், தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம், தியாகி செண்பகராமன் ஆகியோர் திருவுருவ சிலைகளுக்கு சமத்துவம் மக்கள் கழகம் நிறுவனத் தலைவர் எர்ணாவூர் நாராயணன் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார் .இதில் தலைமை நிலைய செயலாளர் தங்கமுத்து, வடசென்னை மாவட்ட நாடார் பேரவை தலைவர் சீனிவாசன், ஆர் .கே. நகர் பகுதி செயலாளர் ராஜேஷ், வடசென்னை மாவட்ட நாடார் பேரவை மாவட்டச் செயலாளர் சாமுவேல், பொருளாளர் சுடலைமணி ஆகியோர் இதில் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்

# சீர்காழியில் மதுவிலக்கு அமலாக்கத்துறை சார்பாக பொதுமக்களுக்கு போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

சீர்காழி , ஜூலை.18-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் மதுவிலக்கு அமலாக்கத்துறை சார்பாக பொதுமக்களுக்கு போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பள்ளி மாணவர்களை கொண்டு உறுதிமொழி மற்றும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.



போதை பொருளுக்கு எதிராக வாசகங்கள் எழுதிய பதாகைகளை கையில் ஏந்தி போதை பொருளால் ஏற்படும் தீமைகள் குறித்து கோஷங்களை எழுப்பியவாறு பேரணியானது சீர்காழி டிஎஸ்பி அலுவலகத்தில் இருந்து தொடங்கி புதிய பேருந்து நிலையம், கச்சேரி ரோடு ,பிடாரி வடக்கு வீதி, பழைய பேருந்து நிலையம் உள்ளிட்ட நான்கு வீதிகள் வழியாக சென்று மீண்டும் காவல் நிலையம் வந்தடைந்தது.

முன்னதாக போதைப் பொருள் குறித்து உறுதிமொழி மற்றும் விழிப்புணர்வு பேரணியை மயிலாடுதுறை கூடுதல் துணை கண்காணிப்பாளர் வேணுகோபால் கொடியசைத்து துவக்கி வைத்தார். மேலும் நிகழ்ச்சியில் சீர்காழி (பொறுப்பு) துணைக் கணிப்பாளர் ராஜ்குமார், சீர்காழி மதுவிலக்கு ஆய்வாளர் செல்வி, மயிலாடுதுறை மதுவிலக்கு ஆய்வாளர் (பொறுப்பு) நாகரத்தினம், சீர்காழி காவல் ஆய்வாளர் சிவக்குமார் மற்றும் ஏராளமான பள்ளி மாணவர்கள் காவல் துறையினர் கலந்து கொண்டார்கள்.

# சீர்காழி அருகே காவிரி சங்கமத்தில் முன்னோர்களுக்கு பலிகர்ம பூஜைகள் செய்து புனித நீராடி வழிபாடு

சீர்காழி, ஜூலை.18-

குடகு மலையில் உருவாகும் காவிரி ஆறு மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்த பூம்புகாரில் கடலில் கலக்கிறது. சங்க முக தீர்த்தம் என்று அழைக்கப்படும் காவிரி சங்கமத்தில் பொதுமக்கள் புனித நீராடுவது வழக்கம். ஆடி மற்றும் தை அமாவாசையன்று காவிரி சங்கமத்தில் புனிதநீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பதான் முன்னோர்களின் ஆசி கிடைக்கும் என்பது மக்களின் நம்பிக்கையாகும்.



அதன்படி ஆடி அமாவாசையான நேற்று பூம்புகார் காவிரி சங்கமத்தில் தமிழகம் முழுதும் இன்றி பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பல்லாயிரகணக்கான பொதுமக்கள் பூம்புகார் காவிரி சங்கமத்தில் முன்னோர்களுக்கு பலிகர்ம பூஜைகள் செய்து தர்ப்பணம் கொடுத்து புனித நீராடினர்.

# திருவெண்காடு சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி கோவிலில் ஆடி மாதபிறப்பை முன்னிட்டு சிறப்பு தீர்த்தவாரி நடைபெற்றது





சீர்காழி, ஜூலை.18-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே திருவெண்காடு கிராமத்தில் தேவார பாடல் பெற்ற பிரம்ம வித்யாம்பிகை சமேத ஸ்வேதாரண்யேஸ்வரர் சுவாமி கோவில் அமைந்துள்ளது.

இக்கோவிலில் சிவபெருமானின் அவதாரங்களில் அகோர மூர்த்தியும், நவகிரகங்களில் ஒன்றான புதன் பகவானும் தனித்தனி சன்னதிகளில் எழுந்தருளி அருள் பாலித்து வருகின்றனர். கோவிலில் சூரியன், சந்திரன், அக்னி என மூன்று தீர்த்தங்கள் உள்ளன.

இந்நிலையில் ஆடி மாத பிறப்பையொட்டி சுவாமி, அம்பாள் தீர்த்தக் கரையில் எழுந்தருளி அஸ்திர தேவருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து அஸ்திர தேவர் மூன்று தீர்த்த குளங்களிளும் தீர்த்தம் அளிக்கும் தீர்த்தவாரி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த தீர்த்தவாரியின் போது திரளான பக்தர்கள் தீர்த்த குளங்களில் நீராடி வழிபட்டனர்.

# மயிலாடுதுறை பள்ளி மாணவகள் பால் பேட்மிண்டன் போட்டியில் மாநில அளவில் முதலிடம்

மயிலாடுதுறை, ஜூலை-18:

திண்டுக்கல் மாவட்ட பால் பேட்மிட்டன் அசோசியேஷன் சார்பாக மாநில அளவில் நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கான பால் பேட்மிட்டன் போட்டிகள் திண்டுக்கல் பி.எஸ்.என்.ஏ பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது.



போட்டியில் மாநிலம் முழுவதும் இருந்து 40 குழுக்கள் பங்கு கொண்டனர். அதில் மாநில அளவில் முதலிடம் மயிலாடுதுறை மாவட்டம், நீடூர் நஸ்ருல் முஸ்லிமீன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கு வெற்றிக்கான கோப்பை, பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. நஸ்ருல் பள்ளியில் இருந்து மாணவர்கள் கௌதம், தமிழ்ச்செல்வன், சூரிய பிரகாஷ், ரகுபதி, பாலமுருகன், பால பிரவீன், சரவணன், சஞ்சீவன் ஆகியோர் கலந்து கொண்டு மாநில அளவில் முதல் பரிசினை பெற்று வந்தனர்.

இவர்களை பள்ளி நிர்வாகத்தின் சார்பில் பொருளாளர் ஏ.சலாவுதீன், தாளாளர் வி.இராமன், முதல்வர் ஆர்.சந்திரசேகரன், ஆசிரிய - ஆசிரியர்கள் மற்றும் இவர்களுக்கு பயிற்சி கொடுத்து அழைத்துச் சென்ற உடற்கல்வி ஆசிரியர்கள் யூ. ராபின் மற்றும் சரவணகுமார் ஆகியோர்கள் பாராட்டி வாழ்த்தினர்.

# திருவொற்றியூர் கடற்கரையில் உடலில் ரத்த காயங்களுடன் மர்மான முறையில் இளைஞர் மரணம்

சென்னை,ஜுலை,18

சென்னை திருவொற்றியூர் எண்ணூர் விரைவு சாலை பாப்புலர் எடை மேடை கடற்கரையில் ரத்த காயங்களுடன் இளைஞர் ஒருவர் இறந்து கிடப்பதாக திருவொற்றியூர் போலீசாருக்கு தகவல் பொதுமக்கள் தகவல் தெரிவித்தனர்.

தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்



போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திய போது திருவொற்றியூரில் பூங்காவன புரத்தைச் சேர்ந்த கதிர்வேல் (42) என தெரியவந்தது இவர் மதுப்பழக்கத்திற்கு அடிமையாகி இருப்பதாகவும் போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் இவர் குடிபோதையில் படுத்து உறங்கும் போது நாக்கு வறண்டு இறந்திருக்கலாம் என போலீசார் சந்தேக்கின்றனர்

அவரது உடலில் கை, கால் பகுதியில் காயங்கள் இருப்பதால் பிரேத பரிசோதனை அறிக்கை வந்த பிறகே அவர் அடித்து கொலை செய்யப்பட்டாரா? அல்லது நாக்கு வறண்டு உயிர் இழந்தாரா ?என்பது தெரிய வரும் என போலீசார் தெரிவித்தனர்

# கந்தர்வகோட்டை வட்டாரத்தில் உழவர் திரள் பரவலாக்கம் அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு

கந்தர்வகோட்டை, ஜூலை.18–

கந்தர்வகோட்டை வட்டாரத்தில்வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் உழவர் திரள் பரவலாக்கம் நிகழ்ச்சி வெள்ளாளவிடுதி கிராமத்தில் நடைபெற்றது.



மாவட்ட ஆட்சியர் ஐ.சா. மெர்சிரம்யா சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன், கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னத்துரை, அப்துல்லா மாநிலங்களவை உறுப்பினர், வெள்ளாளவிடுதி ஊராட்சி மன்றத் தலைவர் பரமசிவம், அட்மா சேர்மன் ராஜேந்திரன், கந்தர்வகோட்டை ஒன்றிய பெருந்தலைவர் கார்த்திக், வேளாண்மை இணை இயக்குநர் பெரியசாமி, வேளாண்மை துணை இயக்குநர் ரவிச்சந்திரன் (மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ) வேளாண்மை துணை இயக்குநர் மோகன்ராஜ்(மாநில திட்டம்), வேளாண்மைஉதவிஇயக்குநர் அன்பரசன், வேளாண்மை அலுவலர் வீரமணி( மாநில திட்டம்), வேளாண்மை அலுவலர் ஜெயவேலன், துணை வேளாண்மை அலுவலர்,முருகன் மற்றும் கந்தர்வகோட்டை வேளாண்மை விரிவாக்க மைய அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர், சிறுதானிய சாகுபடி பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் பயிற்சியில் கூறப்பட்டது.

## ஜூலை 18 முதல் ஜூலை 23 வரை

# தமிழ்நாடு நாள் உருவான வரலாறு குறித்த சிறப்பு புகைப்பட கண்காட்சி புதுக்கோட்டை கலெக்டர் மெர்சி ரம்யா தகவல்

புதுக்கோட்டை , ஜூலை.18–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க ஜூலை 18 தமிழ்நாடு நாளாக தமிழ்நாடு அரசால் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் இந்நாளை கொண்டாடும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறை, தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் பள்ளிக்கல்வித்துறை இணைந்து பேரணி மற்றும் புகைப்படக்கண்காட்சி தமிழ்நாடு முழுவதும் நடத்திட அரசின் தலைமைச்செயலாளர் அறிவித்ததற்கிணங்க புதுக்கோட்டை மாவட்டத்தில் 'தமிழ்நாடு நாளை" சிறப்பாக கொண்டாடும் வகையில் பள்ளி மாணவர்களை கொண்டு எழுச்சிமிக்க பேரணியும், பொதுமக்கள் இந்த நாளினை பற்றி அறிந்து கொள்ளும் வகையிலும் புகைப்படக் கண்காட்சி நடைபெறவுள்ளது.



மாணவர்கள் பங்கு பெறும் பேரணியில் தமிழ்நாடு நாளை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் பதாகைகளும், எழுச்சி முழக்கங்களும் இடம் பெறும். மேலும், பேரணி முடிவில் மாணவர்கள் தமிழ்நாடு நாளை பற்றி தெரிந்து கொள்ள மாவட்ட ஆட்சியரகத்தில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியினை பார்வையிடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பேரணியானது புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் தொடங்கி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் நிறைவு பெறும். பொதுமக்கள் அதிகமாக வருகை தரும் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இப்புகைப் படக்கண்காட்சி அமைக்கப்படுவதால் பலரும் இந்த தமிழ்நாடு நாளை பற்றியும், அதன் வரலாறு மற்றும் அரசின் சாதனைகளை தெரிந்துகொள்ளும் வகையில் சாதனை விளக்க புகைப்படங்கள் இக்கண்காட்சியில் அமைக்கப்படும். இப்புகைப்படக் கண்காட்சியானது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக முன்புறத்தில் அமைக்கப்பட்டு 18.07.2023 முதல் 23.07.2023 வரை பொது மக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட உள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்கள் இக்கண்காட்சியினை கண்டு தமிழ்நாடு நாள் வரலாற்றினை அறிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சிரம்யா தெரிவித்துள்ளார்.

# ஆலங்குடி அருகே சாலை பாதுகாப்பு பெண்கள் பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்

ஆலங்குடி ஜூலை.18–

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள வம்பன் அற்புதா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் பெண்கள் பாதுகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. கருத்தரங்கத்திற்கு அற்புதா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் ஜான் மார்ட்டின் தலைமை வகித்தார்.





துணை முதல்வர் அருட்சகோதரி பக்சி மெட்டில்டா வரவேற்றார், கருத்தரங்கில் ஆலங்குடி வட்டார போக்குவரத்து அலுவலர் நல்லதம்பி, நகர வட்டார போக்குவரத்து காவல் ஆய்வாளர் பாஸ்கர், இந்தியன் ரெட் கிராஸ் ஆலங்குடி கிளை சேர்மன் மருத்துவர் முத்தையா, பொருளாளர் ஜெயச்சந்திரன், துணைச் செயலாளர் லட்சுமி நாராயணன், துணைப் பொருளாளர் முருகேசன், செயற்குழு உறுப்பினர் சிவ.ஆனந்தன், அருட்சகோதரி மார்கரேர் மேரி ஆகியோர் கலந்து கொண்டு சாலை பாதுகாப்பு, பெண்கள் பாதுகாப்பு பற்றி சிறப்புரையாற்றினர், நிகழ்ச்சியின் முடிவில் இன்னாசிமுத்து நன்றி கூறினார்.



▶ விராலிமலையில் நடந்து வரும் புத்தக திருவிழாவின் 4ம் நாள் நிகழ்வில் புதுகை கவிஞர் ராமுக்கண்ணு, ராமதாஸ் ஆகியோர் பிராவிடன்ஸ் பள்ளி மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினர். அருகில் பூபாலன், மாரியப்பன், நூலகர் ஜெயராஜ், சிவகுமார், அசோகன் பள்ளி முதல்வர் அனுதாமஸ் ஆகியோர் உள்ளனர்.



▶ தென்காசி தொகுதிக்கான மறு வாக்கு எண்ணிக்கை உயர் நீதிமன்ற உத்தரவின் படி நடைபெற்று மீண்டும் வெற்றி பெற்ற தென்காசி சட்டமன்ற உறுப்பினரும் காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவருமான எஸ். பழனி நாடார் காங்கிரஸ் கட்சியின் தென்காசி மாவட்ட பொதுச் செயலாளர் ஏஜிஎம். கணேசன் நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தார்.



▶ அரசரடி ரயில்வே மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மதுரை உயர்நீதிமன்ற கூடுதல் அரசு பிளீடர் கிறிஸ்டி நல்லாசிரியர் ஜான் பெலிக்ஸ் கென்னடி சோழர்கள் இன்று என்ற நூலை வழங்கினார். அருகில் மிட்லாண்ட் தியேட்டர் நிர்வாக இயக்குனர் கவிதா, கனரா வங்கி காசாளர் ஆறுமுகம், மைதான முதன்மை பொறுப்பாளர் சுதாகர் ஆகியோர் உள்ளனர்.

# அரியலூர் மாவட்டம் நடுவலூர் பாரத மாதா ஆர் சி மேல்நிலைப் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் விழா



அரியலூர், ஜூலை.18–

நடுவலூர் பாரத மாதா ஆர் சி மேல்நிலைப் பள்ளியில், கல்வி வளர்ச்சி நாள் விழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், நடுவலூர் கிராமத்தில் உள்ள, பாரத மாதா ஆர் சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற கல்வி வளர்ச்சி நாள் விழாவுக்கு, பள்ளி தாளாளர் ஜோசப் தனராஜ் தலைமை வகித்தார், தலைமை ஆசிரியர் ராபர்ட் வரவேற்றுப் பேசினார்,

2200 மாணவ, மாணவிகள் கல்வி பயிலும் இக்கல்வி நிறுவனத்தில், பெருந்தலைவர் காமராஜ் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற, கல்வி வளர்ச்சி நாள் விழாவை ஒட்டி, பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்ற பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி, கட்டுரை போட்டி உள்ளிட்டவை நடைபெற்றது.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை, பள்ளியின் தாளாளர் ஜோசப் தனராஜ், தலைமை ஆசிரியர் ராபர்ட் உள்ளிட்டோர் வழங்கினர், ஆசிரியை ரூபி உள்பட, இருபால் ஆசிரியர்கள், பள்ளி மாணவ மாணவிகள் உட்பட, பலரும் கலந்து கொண்ட விழா முடிவில், உதவி தலைமை ஆசிரியை டெய்சி நன்றி கூறினார்.

# எதிர்க்கட்சிகளின் கூட்டத்தை பொறுத்துக்கொள்ள முடியாமல் அமலாக்கத் துறையை பாஜக ஏவி வருகிறது திமுக

சென்னை , ஜூலை.18–

எதிர்க்கட்சிகளின் கூட்டத்தை பொறுத்துக்கொள்ள முடியாமல் அமலாக்கத் துறையை பாஜக ஏவி வருவதாக திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி குற்றம்சாட்டினார்.



தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி வீட்டில் நேற்று காலை சுமார் 7.30 மணி முதல் அமலாக்கத் துறை சோதனை நடைபெற்று வருகிறது. சென்னை மற்றும் விழுப்புரத்தில் அமைச்சர் பொன்முடிக்கு தொடர்புடைய 9 இடங்களில் இந்த சோதனை நடைபெற்று வருகிறது. அமைச்சர் பொன் முடியின் மகன் வீட்டிலும் அமலாக்கத் துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர். சென்னை சைதாப்பேட்டையில் உள்ள பொன்முடியின் வீடுகளில் சோதனை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், சோதனை நடைபெறும் சைதாப்பேட்டை வீட்டுக்கு வருகை தந்த திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது, "முதல்வர் தனது பிறந்த நாள் விழாவில், யார் பிரதமராக வர வேண்டும் என்பதைவிட, யார் வரக் கூடாது என்பது தான் முக்கியம் என்று பேசினார். அதன் பிறகு தொடர்ந்து மத்திய அரசு, ஆளுநர் மூலமாக சில நெருக்கடிகளையும், தற்போது அமலாக்கத் துறை மூலமாக நெருக்கடிகளையும் தந்து கொண்டுள்ளது.

முதல்வர் ஸ்டாலின் பாட்னா கூட்டத்தில் கலந்து கொண்டபோது செந்தில் பாலாஜி வீட்டில் சோதனை நடைபெற்றது. தற்போது பெங்களூரு கூட்டத்தின் கவனத்தை திசை திருப்பவே பொன்முடி வீட்டில் அமலாக்கத் துறை சோதனை செய்கிறார்கள். எதிர்க்கட்சிகளின் கூட்டத்தை பொறுத்துக்கொள்ள முடியாமல் அமலாக்கத் துறையை பாஜக ஏவி வருகிறது.

எந்த வழக்கு என்று தெரிந்துகொள்ள, அவரின் வழக்கறிஞர் என்ற முறையில் எனக்கு உரிமை உள்ளது. ஆனால், எங்களை அனுமதிக்கவில்லை. சட்ட ஆலோசனை வழங்குவதற்குக் கூட உள்ளே அனுமதிக்கவில்லை. ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட வழக்கில் நெருக்கடி அளிக்கிறார்கள். அதிமுக ஆட்சியில் போடப்பட்ட வழக்கை வைத்து மத்திய அரசு நெருக்கடி கொடுத்து வருகிறது. திமுக எந்த மிரட்டலுக்கும் அஞ்சாது" என்று அவர் கூறினார்.

# அறந்தாங்கி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சார்பில் மூலிகை தோட்டம் அமைப்பு

அறந்தாங்கி ஜூலை 18

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 2011-2014 ஆண்டு பயின்ற அமைப்பியல் துறை மாணவர்கள் தற்போதைய நவீன தொழில்நுட்ப காலத்தில் அதிகரித்து வரும் வாகனங்களின் புகையினால் காற்று மாசு படுவதை தடுக்கும் நோக்கத்தோடு கல்லூரி வளாகத்தில் மூலிகை தோட்டம் அமைத்தனர். கல்யாணமுருங்கை, நாகமல்லி, வெள்ளைதூதுவளை, கஸ்தூரி மஞ்சள் உள்பட 231 வகையான செடிகளை கல்லூரி முதல்வர் (பொ) குமார் தலைமையில் பச்சலூர் அரசு நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஜோதிமணி, ஊர்வணி ஊராட்சி மன்ற தலைவர் ஏகாம்பாள் சந்திரமோகன், ஆகியோர் செடிகளை நட்டு துவக்கி வைத்தனர்.



முன்னாள் மாணவர்கள் ராணியம்மாள் கல்வி அறக்கட்டளை நிறுவனர் பொறியாளர் சர்வம் சரவணன், பொறியாளர்கள். பா.விஜய், க.சரவணன் உள்ளிட்ட முன்னாள் மாணவர்கள் 231 வகையான மூலிகை செடிகளை நட்டு தோட்டம் அமைத்தனர். அறந்தாங்கி பகுதியில் சிறந்த மூலிகை தோட்டம் அமைத்து பொதுமக்கள் பார்த்து. பயன்பெறும் வகையில் முன்னுதாரமாக திகழும் மூலிகை தோட்டம். கல்லூரி முதல்வர் (பொ) குமார் தலைமையில். பச்சலூர் பள்ளி தலைமை ஆசிரியர் ஜோதி மணி திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி அனைத்து துறை பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# தென்காசியில் விலையில்லா மிதி வண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி

தென்காசி, ஜூலை.18–

தென்காசி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் வைத்து தமிழக அரசின் விலையில்லா மிதி வண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது, இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் துரை.ரவிச்சந்திரன் தலைமை வகித்தார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் விலையில்லாமிதிவண்டிகளை மாணவ,மாணவிகளுக்கு வழங்கினார்.



இந்நிகழ்ச்சிக்கு தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார் சட்டமன்ற உறுப்பினர்கள் தென்காசி எஸ்.பழனி நாடார், சங்கரன்கோவில் ராஜா, வாசுதேவநல்லூர் சதன்திருமலை குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 9729 மாணவ, மாணவியர்களுக்கும், ஆதிதிராவிட நலத்துறை சார்பில் 3008 மாணவ மாணவியர்களுக்கும் பள்ளி கல்வித்துறை சார்பில் 316 மாணவ,மாணவியர்களுக்கும் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் தமிழ்ச்செல்வி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முத்தையா மாவட்ட கல்வி அலுவலர் ராமசுப்பு மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் உதய கிருஷ்ணன் தென்காசி நகர் மன்றத் தலைவர் சாதிர் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இளவரசி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் ராமசுப்பிரமணியன், தென்காசி நகர காங்கிரஸ் தலைவர் மாடசாமி ஜோதிடர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கந்தர்வகோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தனியார் தொண்டு நிறுவனம் சார்பில் பாராட்டு விழா

கந்தர்வகோட்டை, ஜூலை.18–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சென்ற ஆண்டு பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொது தேர்வுகளில் முதல் மதிப்பெண்களை பெற்ற மாணவ,மாணவிகளுக்கு தனியார் அறக்கட்டளையின் சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்த பரிசு வழங்கும் விழாவில் முன்னாள் தமிழக சிலை தடுப்பு பிரிவுத்துறை அதிகாரி பொன்மாணிக்கவேல் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார், இந்த நிகழ்விற்கு பள்ளியின் ஆசிரியை சஹீனா வரவேற்புரை ஆற்றினார், கந்தர்வகோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பழனிவேலு பெண்கள் பள்ளி (பொறுப்பு) தலைமை ஆசிரியர் சசிகுமார் ஆகியோர் தலைமை வகித்தனர்.

ஆமினா இப்ராஹிம் அறக்கட்டளையின் நிறுவனத் தலைவரும் தொழிலதிபருமான சிராஜுதீன் முன்னிலை வகித்தார், விழாவில் பேசிய சிலைத் தடுப்பு துரை காவல் அதிகாரி பொன்மாணிக்கவேல் தொடர்ந்து 29 ஆண்டுகளாக மாணவ மாணவிகளுக்கு இந்த ஊக்கத் தொகையை தனது தாய்,தந்தையர் நினைவாக வழங்கி வருகின்ற அறக்கட்டளையின் நிர்வாகி சிராஜுதீனை இந்தத் தருணத்தில் நான் மனமாற பாராட்டுகிறேன் மேலும் குற்ற சம்பவங்களில் ஈடுபடுகின்ற குற்றவாளிகளை தைரியத்தோடு காவல்துறைக்கு தெரியப்படுத்துகின்ற மாணவிகளுக்கு தனது சொந்த பணத்திலிருந்து பத்தாயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்குவதாக அறிவித்தார்,



மேலும் மாணவ மாணவிகள் படித்து முடித்தவுடன் ஏதாவது ஒரு அரசுப் பணியில் சேர்ந்து சம்பளம் வாங்கக்கூடிய நபராக இருக்கக் கூடாது அதைத் தாண்டி படித்தவர்கள் அதிக அளவில் பொதுப்பணிகளில் ஈடுபட வேண்டும் அந்த பொதுப் பணிகளை செய்வதற்கு அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள வார்டு உறுப்பினர், கவுன்சிலர், சட்டமன்ற உறுப்பினர் ,எம். பி அமைச்சர் முதலமைச்சர் போன்ற எண்ணற்ற பணிகள் இருக்கின்றன ஆகவே மாணவ மாணவிகள் தங்களை தூய்மையான அரசியல்வாதிகளாக மாற்றிக்கொண்டு பொதுப்பணிகளில் ஈடுபட முன்வர வேண்டும், முதலில் இந்த செயல்களை புரிவதற்கு நமக்கு தடையாக இருக்கின்ற தயக்கத்தையும், வெட்கத்தையும் அகற்ற வேண்டும்

,தனி மனித ஒழுக்கத்தை கடைபிடித்து ஆணுக்குப் பெண் சமம் என்ற உணர்வோடு பெண்கள் பயம் அறியாமல் நடை போட வேண்டும் அதேபோல் ஆசிரியர் பணி என்பது நல்ல சமுதாயத்தை உருவாக்குகின்ற பணி அந்தப் பணியை ஆசிரியர்கள் சிறப்பாக செய்ய வேண்டும் என்று பேசினார்.

விழாவில் மாணவ மாணவிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது, நிகழ்ச்சியில் கந்தர்வகோட்டை காவல் ஆய்வாளர் செந்தில்மாறன், பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியை சப்னம், பள்ளி மேலாண்மை குழுத் தலைவர் அகிலா சீனிவாசன், அறக்கட்டளையின் மேற்பார்வையாளர் சாகுல் ஹமீது, பெற்றோர்கள் இருபால் ஆசிரியர் பெருமக்கள், மாணவ மாணவியர் கலந்து கொண்டு சிறப்பித்தனர், முடிவில் பள்ளியின் ஆசிரியர் ஜெயக்குமார் நன்றி உரையாற்றினார் ஆசிரியர் பாரதிராஜா தொகுத்து வழங்கினார்.

# கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு 19–ம் தேதி உதயநிதி ஸ்டாலின் வருகை முன்னேற்பாடுகள் தீவிரம்

கள்ளக்குறிச்சி, ஜூலை,18–

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற உள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகின்ற 19-ஆம் தேதி கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு வருகை தரவுள்ள விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை வரவேற்கும் விதமாக உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட எலவனாசூர்கோட்டை பகுதியில் சென்னை சேலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலை அருகே தமிழக முதல்வர் ஸ்டாலின் மற்றும் உதயநிதி ஸ்டாலின் உருவபடம் பொறிக்கப்பட்ட ராட்சத பலூனை சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான உதயசூரியன், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன், உளுந்தூர்பேட்டை ஒன்றிய குழுத் தலைவர் ராஜவேல் ஆகியோர் வானில் பறக்க விட்டனர்.



இதனைத் தொடர்ந்து இங்கு மிகப் பிரம்மாண்ட கொடி கம்பம் மற்றும் கலைஞரின் திருஉருவச்சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது, மேலும் அன்றைய தினம் விளையாட்டுத்துறை அமைச்சர் திமுக கொடியை ஏற்றி வைத்து கலைஞரின் திருவுருவச் சிலையையும் திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெறுவதால், நிகழ்ச்சி ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# தா பழூரில் மதிமுக சார்பில் கையெழுத்து இயக்கம்



அரியலூர், ஜுலை.18–

தா பழூரில் மதிமுக சார்பில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

தமிழக ஆளுநர் ஆர். என். ரவியை ஆளுநர் பொறுப்பில் இருந்து நீக்கம் செய்ய, இந்திய குடியரசுத் தலைவரை வலியுறுத்தி, அரியலூர் மாவட்டம், தா. பழூர் ஊராட்சி ஒன்றிய மதிமுக சார்பில், தா பழூர் கடை வீதியில் நடைபெற்ற கையெழுத்து இயக்கதுவக்க விழாவுக்கு, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு. சின்னப்பா தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் தென்கச்சி எஸ். ராமச்சந்திரன் வரவேற்று பேசினார், மதிமுக மாவட்டச் செயலாளர் ராமநாதன், ஒன்றிய கவுன்சிலர் கவிஞர் எழிலரசன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் முதல் கையெழுத்திட்டு, கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார், இந்நிகழ்ச்சியில் மதிமுக நிர்வாகிகள் வாரணவாசி ராஜேந்திரன், கொளஞ்சி என்கிற சிவகுமார், அரியலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் சங்கர், மற்றும் கூட்டணி கட்சிகளான திமுக, காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர், முடிவில் மதிமுக மாவட்ட பிரதிநிதி அறவாழி நன்றி கூறினார்.

# இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை 52 சதவீதமாக உள்ளது அமைச்சர் சிவசங்கர்



அரியலூர், ஜுலை.18–

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை 52 சதவீதமாக உள்ளது என போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார்.

அரியலூர் மாவட்டம், செந்துறை அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி மற்றும் செந்துறை, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் சிவசங்கர் நேற்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகள், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள் சின்னப்பா (அரியலூர்), கண்ணன் (ஜெயங்கொண்டம்) அவர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. பின்னர், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி, போக்குவரத்துத் துறை அமைச்சர் பேசியதாவது:- தமிழ்நாடு முதலமைச்சர் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில் தொடர்ந்து பல்வேறு திட்டங்களைசெயல்படுத்தி வருகிறார்கள். அதன் அடிப்படையில் இன்றைய தினம் செந்துறை அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் அரியலூர்மாவட்டத்தைச் சேர்ந்த 2022-2023ஆம் கல்வியாண்டில் 11-ஆம் வகுப்பு பயின்ற செந்துறை, அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 116 மாணவர்களுக்கும், பொன்பரப்பி அரசு மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 68 மாணவர்கள், 28 மாணவிகள் என மொத்தம் 96 மாணவ, மாணவியர்களுக்கும், தளவாய் அரசு மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 38 மாணவர்கள், 35 மாணவிகள் என மொத்தம் 73 மாணவ, மாணவியர்களுக்கும், முள்ளுக்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 08 மாணவர்கள், 12 மாணவிகள் என மொத்தம் 20 மாணவ, மாணவியர்களுக்கும், குறிச்சிக்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 33 மாணவர்கள், 14 மாணவிகள் என மொத்தம் 47 மாணவ, மாணவியர்களுக்கும், குழுமூர் புனித பிலோமினாள் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 92 மாணவர்கள், 82 மாணவிகள் என மொத்தம் 174 மாணவ, மாணவியர்களுக்கும் என ஆக மொத்தம் 355 மாணவர்களுக்கும், 171 மாணவிகளுக்கும் என 526 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதே போன்று, இன்றையதினம் செந்துறை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 195 மாணவிகளுக்கும், பரணம் அரசு மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 41 மாணவர்கள், 43 மாணவிகள் என மொத்தம் 84 மாணவ, மாணவியர்களுக்கும், இரும்புலிக்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 34 மாணவர்கள், 17 மாணவிகள் என மொத்தம் 51 மாணவ, மாணவியர்களுக்கும், ஆனந்தவாடி அரசு மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 26 மாணவர்கள், 21 மாணவிகள் என மொத்தம் 47 மாணவ, மாணவியர்களுக்கும் என ஆக மொத்தம் 101 மாணவர்களுக்கும், 276 மாணவிகளுக்கும் என 377 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இன்றைய தினம் 903 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அரியலூர் மாவட்டத்தில் உள்ள 64 அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 2,621மாணவர்கள், 3,157 மாணவியர்கள் என மொத்தம் 5,778 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளது.

மேலும், கர்மவீரர் காமராஜர் அவர்கள் தமிழகத்தில் அதிக பள்ளிகளை திறந்தது போல முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும் தமிழகத்தில் உள்ள மாணவர்கள் உயர்கல்வி கற்கும் வகையில் அதிகளவிலான கல்லூரிகள் மற்றும் பல்கலை கழகங்களை நிறுவி சாதனை படைத்துள்ளார்கள். இதன் பயனாக தமிழகத்தில் உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. இந்தியா முழுவதும் உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கையை 50 சதவீதமாக உயர்த்த ஒன்றிய அரசு தற்பொழுது இலக்கு நிர்ணயித்துள்ளது ஆனால் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை 52 சதவீதமாக உள்ளது. தமிழகத்தில் நேற்றைய தினம் அரசுப் பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கான 7.5 சதவீத அரசு இடஒதுக்கீட்டில் மருத்துவப் படிப்பிற்கான தேர்வுப் பெற்ற முதல் பத்து இடங்களில் நமது அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த மாணவி அன்னபூரணி 7ஆம் இடத்தையும், பெரம்பலூர் அரசு மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த மாணவன் புகழேந்தி 8 ஆம் இடத்தையும் பெற்று சாதனைப் படைத்துள்ளார்கள். எனவே, தமிழக அரசின் இதுபோன்ற கற்றல் உபகரணங்களை மாணவ, மாணவியர் முறையாக பயன்படுத்தி கல்விகற்று வாழ்வில் முன்னேற்றம் அடைவதுடன் நமது மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டுமென பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் விஜயலட்சுமி, மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) ஜெயா, செந்துறை ஊராட்சிமன்றத்தலைவர் செல்லம் கடம்பன், பள்ளி தலைமையாசிரியர்கள் செல்வவிநாயகம், ஆதிரை, பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர்கள், பள்ளி மேலாண்மைக்குழுத் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# செம்பனார்கோயில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி ரூ. 2 கோடிக்கு கொள்முதல்



செம்பனாகோயில், ஜுலை- 18:

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா செம்பனார்கோயிலில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகளின் விளைபொருட்கள் தேசிய வேளாண் மின்னணு சந்தை திட்டத்தின்படி இ-நாம் மூலம் மறைமுக ஏலம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தற்போது செம்பனார்கோயில் பகுதியில் விவசாயிகள் பருத்தி அறுவடை செய்து வருகின்றனர்.

இதனால் விவசாயிகளின் நலன்கருதி செம்பனார்கோயிலில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நாகை விற்பனை குழு மூலம் தேசிய வேளாண் மின்னணு சந்தை திட்டத்தின் கீழ் இ-நாம் முறையில் பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் தேசிய வேளாண் மின்னணு சந்தை மூலம் கண்காணிப்பாளர் சங்கர்ராஜா தலைமையில் ஏலம் நடைபெற்றது.

இந்த பருத்தி ஏலத்தில் குவிண்டால் ஒன்றுக்கு அதிகபட்ச விலையாக ரூ.6,669-க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ.6,145-க்கும் சராசரி விலையாக ரூ.6,375-க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. மொத்தமாக சுமார் 3,500 குவிண்டால் பருத்தி ரூ.2 கோடிக்கு கொள்முதல் பரிவர்த்தனை நடைபெற்றது. இந்த ஏலத்தில் 746 விவசாயிகள் கொண்டுவந்த பருத்தியை, தேனி, கோவை, கொங்கணாபுரம், பெரம்பலூர், விழுப்புரம், திருப்பூர், கும்பகோணம் தங்களிடம் பகுதிகளில் இருந்தும் மற்றும் ஆந்திரா, குஜராத், மகாராஷ்ட்ரா மாநிலங்களில் இருந்து 16 வியாபாரிகள் மற்றும் மில் அதிபர்கள் கொள்முதல் செய்தனர்.



▶ தியாகிகள் தினத்தையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், தியாகிகளை நினைவு கூர்ந்திடும் வகையில் இன்று சென்னை காந்தி மண்டப வளாகத்தில் தியாகிகள் மணிமண்டபம் முகப்பில் அமைந்துள்ள தியாகிகள் செண்பகராமன், ஆர்யா என்கிற பாஷ்யம், சங்கரலிங்கனார் ஆகியோரது திருவுருவச் சிலைகளுக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படங்களுக்கு அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், மா. சுப்பிரமணியன், சென்னை மேயர் ஆர்.பிரியா, ஏ.எம்.வி. பிரபாகரராஜா எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ்குமார், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

# சென்னங்காரணியில் அருள்மிகு ஸ்ரீ திரௌபதி அம்மன் திருக்கோவிலில் தீமிதி திருவிழா





ஊத்துக்கோட்டை, ஜுலை 18–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், சென்னங்காரணி ஊராட்சியில் அருள்மிகு ஸ்ரீ திரௌபதி அம்மன் திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில், தீமிதி திருவிழாவை முன்னிட்டு கடந்த 7-ம் தேதி கோவில் வளாகத்தில் கொடியேற்றும் நிகழ்ச்சியும், காப்பு கட்டும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

8-ம் தேதி பகசூரன் சம்ஹாரம், 9-ம் தேதி அம்மன் திருக்கல்யாணம், 10-ம் தேதி நச்சு குழி யாகம், 11-ம் தேதி பூங்கரகம், 12-ம் தேதி அர்ஜுனன் தபசு, 13-ம் தேதி தர்மராஜா உற்சவம், 14-ம் தேதி மாடு பிடித்தல் சண்டை, 15-ம் தேதி துரியோதனன் படுகளம் உள்ளிட்டவை நடைபெற்றது.

நேற்று முன் தினம் இரவு தீ மிதி திருவிழா நடைபெற்றது. எனவே, இந்த ஊராட்சியைச் சேர்ந்த மேட்டுகண்டிகை, பள்ள கண்டிகை கிராம மக்கள் காப்பு கட்டி விரதம் இருந்த 274 பக்தர்கள் நேற்று முன்தினம் இரவு தீ மிதித்தனர். எனவே, காப்பு கட்டி விரதம் இருந்த குமார மக்கள் ஊர் எல்லையில் உள்ள பவானி அம்மன் கோவில் அருகே புனித நீராடினர். அவர்களை பூக்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட அம்மன் ஊர் எல்லைக்குச் சென்று கோவிலுக்கு அழைத்து வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதன் பின்னர், கோவிலின் எதிரே அமைக்கப்பட்டு இருந்த தீ குண்டத்தில் 274 பக்தர்களும் ஒருவர் பின், ஒருவராக இறங்கி தீ மிதித்து தங்களது நேர்த்தி கடனை செலுத்தினர். நேற்று அரவான் தலைத்தகனம் மற்றும் தர்மராஜர் பட்டாபிஷேகம், அம்மன் திருவீதி உலா வரும் நிகழ்ச்சி, மஞ்சள் நீராட்டு நிகழ்ச்சி உள்ளிட்டவை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை விழா குழுவினர்களும், கிராம மக்களும் சிறப்பாக செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில், சுற்றுவட்டாரத்தைச்சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

‘தமிழ்நாடு நாள்’ விழாவை முன்னிட்டு

# அனைத்து மாவட்டங்களிலும் புகைப்படக் கண்காட்சி: அரசு

சென்னை, ஜுலை.18–

"தமிழ்நாடு நாள்" விழாவை முன்னிட்டு இன்று (செவ்வாய்க்கிழமை) அனைத்து மாவட்டங்களிலும் பேரணி மற்றும் புகைப்படக் கண்காட்சி நடைபெறும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: "தமிழ்நாடு நாள் ஜுலை 18-ம் நாள் கொண்டாடப்படுகிறது. கடந்த ஆண்டு (2022) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக முதல்வர் கலந்துகொண்டார். விழாவில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டது.

நடப்பு ஆண்டில் வரும் ஜுலை 18-ம் தேதி அனைத்து மாவட்டங்களில் "தமிழ்நாடு நாள்" குறித்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்குபெறும் மாபெரும் பேரணி நடைபெறவுள்ளது. இப்பேரணியில் மாணவ, மாணவியர்கள் தமிழ்நாடு குறித்த சிறப்பை எடுத்துரைக்கும் விதமாக பதாகைகளை ஏந்திச் செல்வார்கள்.

அதேபோன்று "தமிழ்நாடு நாள்" முக்கியத்துவத்தை இளைய தலைமுறையினரும் அறியும் வகையில், அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் சிறப்பு புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட உள்ளது. 18-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை அனைத்து மாவட்ட தலைநகரங்களில், இச்சிறப்பு புகைப்படக் கண்காட்சி நடைபெறும். அமைச்சர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பு செய்வார்கள்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



▶ கோவை மாவட்டம், வெள்ளலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் மாணவர்கள் சார்பில் நடைபெற்ற வைர விழாவில் புதிய பள்ளி கட்டிடத்தை கலெக்டர் கிராந்திகுமார் பாடி திறந்து வைத்தார். உடன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகசுந்தரம், கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் செ.தாமோதரன், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் சுகுமார் ஆகியோர் உள்ளனர்.

# மறைந்த ஓட்டுநர்கள் குடும்பத்திற்கு நிதி உதவி மற்றும் மள்ளிகை பொருள் வழங்கிய தமிழ்நாடு சுற்றுலா ஓட்டுநர்கள்



செங்கல்பட்டு, ஜுலை,18

செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் அடுத்த பரமன் கேணி கிராமத்தை சேர்ந்த ஓட்டுநர் ஜெயசீலன் இவர் தமிழ்நாடு சுற்றுலா ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்கள் நலசங்க டி. டி, டி,ஓ உறுப்பினராக இருந்துள்ளார்.

இவர் கடந்த சில தினங்களுக்கு முன்பு உடல் நலக்குறைவால் காலமானார் இவரது குடும்பத்திற்கு 38மாவட்டத்தை சேர்ந்த டி.டி.டி.ஓ சார்பில் நிதி உதவி மற்றும் மள்ளிகை பொருட்கள் ஆகியவற்றையும் மற்றும் மறைந்த ஓட்டுநர் ஜெயசீலன் குடும்பத்திற்கு 32500 நேரில் சென்று ஆறுதல் தெரிவித்து நிதி உதவி மற்றும் மள்ளிகைபொருட்களை வழங்கினர்.

இந்தநிகழ்ச்சியில்மாநில செயற்குழு உறுப்பினர் குமரன் மாவட்ட தலைவர் சதீஷ்குமார் செயலாளர் தமின் மாவட்ட பொருளாளர் டேவிட் மற்றும் மாவட்ட உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# ஊத்துக்கோட்டை வழக்கறிஞர்கள் சங்கம் சார்பாக டிஎஸ்பி–யை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



ஊத்துக்கோட்டை, ஜுலை18–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், ஊத்துக்கோட்டை வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் ஊத்துக்கோட்டையில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற வளாகத்தில் ஊத்துக்கோட்டை டிஎஸ்பி கணேஷ்குமாரை கண்டித்து நேற்று காலை கவன ஈர்ப்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வழக்கறிஞர்கள் மீது பொய் வழக்கு போடுவதாகவும், பொது மக்களிடையே வழக்கறிஞர்களின் நன்மதிப்பை கெடுக்கும் வகையில் டிஎஸ்பி செயல்படுவதாகவும் குற்றச்சாட்டை முன்வைத்து இந்த கவன ஈர்ப்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, ஊத்துக்கோட்டை வழக்கறிஞர்கள் சங்கதலைவர் சீனிவாசன் தலைமை தாங்கினார். ஊத்துக்கோட்டை வழக்கறிஞர்கள் சங்க செயலாளர் முனுசாமி, பொருளாளர் தினகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், ஏராளமான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டு டிஎஸ்பி-யை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பி தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர்.



# வீடுகளில் வெளிநாட்டு கரன்சி அமலாக்கத்துறை அலுவலகத்தில் பொன்முடி

# இலாகா இல்லாத அமைச்சர் செந்தில்பாலாஜி புழல் சிறையில் அடைப்பு





# கருணாநிதி கவியரங்கத்தை மழையில் நனைந்தவாறு ரசித்த அமைச்சர்கள்


| சென்னை / புதுக்கோட்டை | 18.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

# வரலாறு

நாளிதழ்

18.07.2023 செவ்வாய்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஏ. ஜே. ஜான் ஆனாப்பரம்பில் , திருவிதாங்கூர் விடுதலை இயக்கப் போராளி (பி.1893) (இ.1957)



கடம்பினி கங்கூலி , இந்தியப் பெண் மருத்துவர் (பி.1861) (இ.1923)



ஜெயச்சாமராஜா உடையார் , மைசூர் சமஸ்தானத்தின் 25வது, கடைசி அரசர் (பி.1919) (இ.1974)



## இன்றைய நினைவு நாள்

வாலி , தமிழகக் கவிஞர் (பி.1931) (இ.2013)



எஸ். வி. ரங்கராவ் , தமிழ், தெலுங்கு திரைப்பட நடிகர் (பி.1918) (இ.1974)



சமர் முகர்ஜி , இந்திய மார்க்சிய அரசியல்வாதி (பி.1913) (இ.2013)



## நெல்சன் மண்டேலா பன்னாட்டு நாள்